2012 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது செங்கல்பட்டு மாவட்டத்தில் 2, 3 கொலைகள் நடந்திருக்கின்றன என்று சொன்னார்கள். இதற்கு முன்பிருந்த ஆட்சிக் காலத்திலே நாம் பார்த்திருப்போம். அசையும் சொத்துகளைத்தான் திருடுவது வழக்கம். ஆனால், அசையா சொத்துகளாக இருக்கின்ற சொத்துகளிலே ஏற்படுகிற சண்டைச்சச்சரவின் காரணமாக—100 மடங்கு இன்றைக்கு விலை உயர்ந்த காரணத்தின் அடிப்படையிலேதான்—இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இதைக் கவனமாக ஏற்று, கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் 2–4–2012 (திங்கட்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

12. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தின் நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

14. 2011–2012 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

[2012 *மார்ச்* 30

15. 2011–2012 ஆம் ஆண்டு “கூடுதல் செலவுக்கான” மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

16. 2011–2012 ஆம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

17. 2012–2013 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி. (தமிழ், ஆங்கிலம்)

18. 2012–2013 ஆம் ஆண்டு “உடனடிச் செலவுக்கான” மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

****